| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 82/2014 in |
| | 353/2025 |
| நாள் | 22.01.2026 |
| பெயர் | ஏழுமலை |
| தந்தை பெயர் | ஆறுமுகம் |
| வயது | 47 |

**<u>பிரதிவாதிகள் 2 முதல் 5 மற்றும் 16 முதல் 24 தரப்பு குறுக்கு விசாரணை</u>**

முனுசாமி என்பவருக்கு எத்தனை மகன்கள் மற்றும் எத்தனை மகள்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். கன்னியம்மாள், ராஜம்மாள், டில்லியம்மாள் ஆகிய மூவரும் கோபால், ஆறுமுகம் ஆகியோரின் சகோதரிகள் என்ற விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்துக்கு யாருக்கு முதலில் பாதிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்துக்களில் முனுசாமி அவர்களுக்கு மூன்றில் ஒரு பாகம் கிடைக்கத்தக்கது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். முனுசாமி என்பவர் எந்த வருடம் இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். முனுசாமியின் மூன்றில் ஒரு பாகம் கூட்டு பங்குரிமை பாகம் அவரின் இறப்பிற்கு பின்பு 5 வாரிசுதாரர்களுக்கும் சமமாக கிடைக்கத்தக்கக்கூடியவை என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வகையில் முனுசாமியின் மூன்று மகள்களுக்கும் பாகம் பெற உரிமை உள்ளது என்ற விவரம் சரியானதா என்றால் ஆமாம். பிரதிவாதிகள் இரண்டு முதல் ஐந்து மற்றும் 16

முதல் 24 மேற்படி கன்னியம்மாள், ராஜம்மாள், டில்லியம்மாள் ஆகியோர்களின் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். எனவே இந்த பிரதிவாதிகளுக்கு தாவாசொத்தில் 16/90 பங்கு ஒதுக்கீடு செய்து பாகப்பிரிவினை பெற உரிமை உடையவர்கள் என்றால் சரிதான். இந்த பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை விவரங்கள் சரியானதா என்றால் ஆமாம்.

**பிரதிவாதிகள் 28 முதல் 33 தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். நான் பாகப்பிரிவினை பரிகாரம் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். முனுசாமி என்பவர் என்னுடைய தாத்தா ஆவார். மேற்படி முனுசாமி என்பவருக்கு ஐந்து பேர் வாரிசுதாரர்கள். அவர்கள் என்னுடைய அத்தை கண்ணியம்மாள், டில்லி அம்மாள், ராஜா அம்மாள், என்னுடைய பெரியப்பா கோபால் மற்றும் என்னுடைய அப்பா ஆறுமுகம் ஆகியோர் வாரிசுதாரர்கள். என்னுடைய பெரியப்பா கோபால் அவர்களின் வாரிசுதாரர்கள் யார் என்று எனக்கு தெரியும். அவருடைய வாரிசுதாரர்கள் எட்டு நபர்கள் இருக்கிறார்கள். லோகநாதன், வசந்தா ஜெயலட்சுமி, தனசேகர், மனோகரன், ராஜா ராமச்சந்திரன் மற்றும் ஆனந்தி ஆகியோர் வாரிசுதாரர்கள். தன்னுடைய தந்தை ஆறுமுகத்திற்கு ஐந்து நபர்கள் வாரிசுதாரர்கள் அவர்கள். என்னுடைய தாயார் முருகம்மாள் என்னுடைய அண்ணன் பாலன், அக்கா காந்தா, மற்றொரு அக்கா குமுதா மற்றும் அண்ணன் பெருமாள் ஏழுமலை மற்றும் என்னுடைய அக்கா லலிதா ஆகியோர் வாரிசுதாரர்கள். லலிதா அவர்களின் தாயார் பெயர் அண்ணாள்ளாம்மாள். முனுசாமி இறந்த பிறகு அவருடைய மகன்கள் கோபால் மற்றும் ஆறுமுகம் ஆகிய இரண்டு பேருக்கு தான் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் தவறு, தாவா சொத்து முனுசாமி தந்தை பூங்காவனம் அவர்களின் பூர்வீக

சொத்து ஆகும். ஆறாவது பிரதிவாதி லோகநாதன் அவர்களுக்கு தெரியாமல் அவருடைய கையொப்பம் பெறாமல் 9வது பிரதிவாதி பதில் உரை மற்றும் எதிர் உரை தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் 28 முதல் 33 வரை உள்ளவர்கள் லோகநாதன் அவர்களின் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு வழக்க சொத்தில் எட்டில் ஒரு பாகம் உள்ளது என்றால் சரிதான், 22.06.1959 தேதியிட்ட குடும்ப ஏற்பாடு பத்திரத்தை பற்றி எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2014 இல் தான் தெரியவந்தது. தாவா சொத்தில் நானும் பிரதிவாதிகளும் கூட்டு அனுபவத்தில் தான் இருந்து வருகிறோம் என்றால் சரிதான்.

**வேண்டுகோளின் படி பிரதிவாதி தரப்பு வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(Sd/- Deepthi Arivunithi, M.L.,),
Principal District Court,
Kancheepuram.